**STARTING TIME 11.35 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 240/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. C. Karthigaiselvam, Senior Bailiff of this court, on 12.11.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **நிர்மலா** Husband's Name : **சீனிவாசன்**

Address : கதவு எண். 238, போர்டிங்பெட் மேற்கு தெரு, சோளிங்கர், சோளிங்கர் தாலுக்கா, ராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 65

**1, 2, 4, 6, 7 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. தாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், என்னுடைய கணவரின் தாத்தா ஆதிமூலம் என்பவருக்கு பாத்தியப்பட்டது ஆகும். தாவா சொத்துக்கள் மேற்படி ஆதிமூலம் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்க வேண்டி என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால், அசல் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

2. ஆதிமூலம் எப்போது காலமானார் என்று தெரியுமா என்றால், தெரியாது. அதனால் அவரது இறப்பு சான்றையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். ஆதிமூலம் என்பவரின் வாரிசு சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். அதுபோல்

ஆதிமூலத்தின் வாரிசு சான்றை தாக்கல் செய்யவில்லை என்றால், அது பற்றி சரியாக தெரியவில்லை. எனவே, ஆதிமூலத்தின் வாரிசுகள் யார், யார் என்பதை நான் சட்டப்படி நிரூபிக்கவில்லை என்றால், சரியல்ல, அவருக்கு வெங்கடகிருஷ்ணன் என்பவர் மட்டும் தான் ஒரே வாரிசு ஆகும்.

3. வெங்கடகிருஷ்ணன் எப்போது காலமானார் என்றால், 1982–ம் ஆண்டு காலமானார். வெங்கடகிருஷ்ணனின் வாரிசு சான்றையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். வெங்கடகிருஷ்ணனுக்கு எத்தனை பெண் பிள்ளைகள், எத்தனை ஆண் பிள்ளைகள் என்றால், 3 ஆண் பிள்ளைகள், 3 பெண் பிள்ளைகள் ஆகும். 3 ஆண் பிள்ளைகளின் பெயர் என்னவென்றால், எனது கணவரான சீனிவாசன், பாண்டுரங்கன், விஜயன் என்கிற வரதராஜன் ஆகும். 3 பெண் பிள்ளைகள் பெயர் தேவகி, சரஸ்வதி, லட்சுமி ஆகும்.

4. வா.சா.ஆ.1 ஆவணம் அசல் ஆவணம் அல்ல, அது நகல் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1–ல் தாவா சொத்தின் சர்வே எண் தற்போது கையால் பென்சிலில் எழுதப்பட்டுள்ளது என்றால், அது முன்பிருந்தே இருந்தது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பென்சிலால் எழுதப்பட்ட இடத்தை தவிர வேறு எந்த இடத்திலும் சர்வே எண் எழுதப்படவில்லை என்றால், சாட்சி வா.சா.ஆ.1 ஆவணத்தை பார்த்துவிட்டு இல்லை என சொல்கிறார்.

5. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பென்சிலால் எழுதப்பட்ட சர்வே எண்ணும், மற்ற விவரங்களும் எழுதப்பட்டுள்ள கையெழுத்து வித்தியாசமாக உள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதப்பட்டுள்ள விவரங்களை என்னால் படித்து பார்த்து சொல்ல முடியுமா என்றால், அதை என்னால் படிக்க முடியவில்லை. எனக்கு எழுத படிக்கு தெரியும் என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் தாவா சொத்திற்கு சம்மந்தப்படாத ஆவணம் என்றால், சரியல்ல.

6. மேற்படி ஆதிமூலம் என்பவருக்கு என்னென்ன சொத்துக்கள் சொந்தமாக இருந்தது என்றால், தாவா சொத்தும், வேறு ஒரு வீடும் சொந்தமாக இருந்தது.

அந்த வீடு எங்கு இருந்தது என்றால், சோளிங்கரில் இருந்தது. ஆதிமூலம் அவரது ஆயுட்காலம் வரை சோளிங்கரில் இருந்ததாக சொல்லும் அந்த வீட்டில் தான் வசித்து வந்து காலமாகிவிட்டார் என்றால், சரிதான். எனது மாமனார் வெங்கடகிருஷ்ணன் என்பவர் எந்த வீட்டில் வசித்து வந்து காலமானார் என்றால், அவரும், அவரது தகப்பனார் ஆதிமூலம் வசித்து வந்த அதே வீட்டிலேயே வசித்து வந்து காலமானார்.

7. வெங்கடகிருஷ்ணனுக்கு எந்தெந்த சொத்துக்கள் தனிப்பட்ட வகையில் சொந்தமாக இருந்தது என்றால், அவருக்கு சொந்தமான தனிப்பட்ட சொத்துக்கள் எதுவும் இல்லை. வெங்கடகிருஷ்ணனுக்கு தாவா சொத்தும், சோளிங்கரில் இருந்ததாக சொல்லும் மற்றொரு வீடும் பிதுராஜ்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என சொல்கிறேனா என்றால், ஆமாம்.

8. வெங்கடகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமான சொத்துக்கள் அவரது வாரிசுகள் 6 பேருக்கும் பாத்தியப்பட்டது என்றால், சரிதான். தாவா சொத்தை பொறுத்து ஆதிமூலமோ அல்லது வெங்கடகிருஷ்ணனோ அவர்களது ஆயுட்காலம் வரை பிரதிவாதிகளுக்கு எதிராக எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுத்ததில்லை என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை.

9. வெங்கடகிருஷ்ணனின் வாரிசுகள் 6 பேரும் சோளிங்கர் மற்றும் வெவ்வேறு இடங்களில் வசித்து வருகிறார்கள் என்றால், சரிதான். நான், என் கணவருடன் எங்கு வசித்து வந்தேன் என்றால், சோளிங்கரில் வசித்து வந்தேன். என் கணவர் சீனிவாசனின் இறப்பு சான்றை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல, செய்துள்ளேள். எனது பிரமாண வாக்குமூலத்தில் என் கணவரின் இறப்பு சான்றை தாக்கல் செய்ததாக உள்ளதா என்றால், இல்லை. அதேபோல் என் கணவரின் வாரிசு சான்றையும் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால், சரிதான்.

10. இவ்வழக்கில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என

தெரியுமா என்றால், தெரியும். பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையில் என்ன சொல்லியுள்ளார்கள் என்று தெரியுமா என்றால், தெரியாது. பிரதிவாதிகள் அவர்களது பதிலுரையில், என்ன சொல்லியுள்ளார்கள் என்று தெரியாமலேயே அந்த விவரம் தவறானது என எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல.

11. வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.8 வரையான ஆவணங்கள் பிரதிவாதிகளுக்குள் எழுதப்பட்ட ஆவணங்கள் என்றால், சரிதான். வா.சா.ஆ.9 ஆவணம் பிரதிவாதிகள் பெயரில் உள்ள பட்டா என்றால், சரிதான். அதேபோல் வா.சா.ஆ.4 ஆவணம் 1 முதல் 3 வரை பிரதிவாதிகளின் தகப்பனார் அர்ஜுன முதலியார் பெயருக்கு பாப்பம்மாள் என்பவர் எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரத்தின் சான்று நகல் என்றால், சரிதான்.

12. வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி தாவா சொத்தானது பாப்பம்மாள் என்பவருக்கு 09.07.1952 அன்று ஆவண எண் 892/1952–ன்படி பாத்தியப்பட்ட சொத்து என சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

13. தாவா சொத்துக்கான வருவாய்துறை ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா சொத்து சம்மந்தமாக வாதிகள் பெயரிலோ அல்லது அவர்களது முதாதையர்கள் பெயரிலோ உள்ள பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. வெங்கடகிருஷ்ணனின் 3 மகன்கள் மற்றும் 3 மகள்களில் தற்போது யார், யார் உயிருடன் உள்ளார்கள் என்றால், மகள் லட்சுமியை தவிர மற்ற அனைவரும் காலமாகிவிட்டார்கள்.

14. தாவா சொத்துக்கான வழிகாட்டி மதிப்பீடு சான்றான வா.சா.ஆ.13–ஐ தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். அதில் எந்த இடத்திலாவது தேதி உள்ளதா என்றால், சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு இல்லை என சொல்கிறார். எனவே, வா.சா.ஆ.13–ல் உள்ள மதிப்பு எந்த காலத்தில் இருந்து, எந்த காலத்திற்க்கு

வரையானது என குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால், சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதிகள் கட்டிடம் கட்டி வசித்து ஆண்டு, அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரிதான்.

1, 2, 4, 6, 7 வரை பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

**ENDING TIME 12.20.P.M.**

YUVARAJ
Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.11.12 15:45:21 +0530